ஆர்ம்ஸ்ட்ராங்

எழுதிய

# வாழ்க்கைக்கான கல்வி

மொழிபெயர்ப்பு:

மு. அருணாசலம்

தமிழ் நூலகம்

திருச்சிற்றம்பலம்

தபால்-மரத்துறை :: குத்தாலம் வழி

இரண்டாம் பதிப்பு
1-7-1954

விலை அணா
ஏழு

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை ... | iii |
| 1. | உறுப்புக்களின் பயிற்சி ... | 7 |
| 2. | மனத்தின் பயிற்சி ... | 17 |
| 3. | ஒழுக்கப் பயிற்சி ... | 23 |
| | முதல்வருஷ அறிக்கை (1870) | 32 |
| | சாசனம் | 37 |

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

# முன்னுரை

கல்வி என்பது வாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கை மூலம் பயில வேண்டிய கல்வி என்று மகாத்மா காந்தி எப்போதும் சொல்லிவந்தார். இந்தக் கருத்தை வைத்துத் திட்டமிடுவது ஆதாரக்கல்வி. உடல் உள்ளம் உயிர் என்ற மூன்றின் ஒருமித்த வளர்ச்சியே இக்கல்வியின் நோக்கம். சென்ற நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவில் நீக்ரோக் களின் கல்விப்பொறுப்பை ஏற்ற ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர், இதே கருத்துக்களைச் சொன்னதோடு, இக்கல்வியை நடத்துவதற்கென்று ஒரு கல்வி ஸ்தாபனமும் அமைத்தார்.

ஆர்ம்ஸ்ட்ராங் 30-1-1839இல் ஹாவாய்த் தீவில் ஒரு பாதிரியாரின் புதல்வராய்ப் பிறந்தார். அவர் தகப்பனார் கொஞ்சகாலம் ஹாவாய்த் தீவுகளின் கல்வி மந்திரியாகவும் இருந்தார். அப்போது, இளம்பருவத்தில் ஆர்ம்ஸ்ட்ராங் அந்த நாட்டுச் சுதேசி மக்களின் பிள்ளைகள், பாடசாலை, கல்வி, வேலை, வாழ்க்கை முதலியவற்றைப் பார்த்துப் பழகச் சந்தர்ப்பமிருந்தது. இப்பழக்கம் அவர் மனத்தில் அழியாமல் நிலைபெற்றுவிட்டது. பின்னால் 1860இல் அவர் அமெரிக்கா வந்து, வில்லியம்ஸ் கல்லூரியில் படித்து 1862இல் பட்டம் பெற்று அப்போது நடந்த யுத்தத்தில் காப்டன் பதவி ஏற்று, யுத்தம் முடியும் காலத்தில் ஜெனரலாயிருந்து, பதவியை விட்டார். ராணுவத்தில் தாம் பெற்ற அனுபவம் பிற்கால வாழ்வில் எவ்வாறு உதவிற்று என்பதை அவர் பின்வருமாறு கூறுகிறார்:

“நீக்ரோ படைவீரர்களின் தலைவனாக இரண்டரை வருஷ காலம் இருந்தேன். அப்போது, விடுதலைபெற்ற அந்த

நீக்ரோ மக்களிடம் மேன்மையான குணங்களும் திறமைகளும் இருந்ததையும், மற்றெல்லாரையும் போல நல்வாழ்வுக்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கும் வேண்டுமென்பதையும் நான் கண்டேன். அவர்களுக்கான கல்வித் திட்டத்தில், செயல் முறையில் விசேஷப் பயிற்சி வேண்டும். பாரம்பரியம் சூழ்நிலை என்ற இரண்டையும் ஒட்டி அத்திட்டத்தை அமைக்க வேண்டும். ஹாம்ப்டன் பாடசாலையைப் போன்ற ஒரு கனவை நான் அடிக்கடி கண்டு கொண்டிருந்தேன். இப் பாடசாலை ஒரு கைத்தொழில் முறையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இது, தன் செலவைத் தானே வகிக்க வேண்டும். புத்திக் கூர்மை பொருந்திய உழைப்புக்கு இடம் தரவேண்டும். இவை மாத்திரமல்ல, நல்லொழுக்கம் அமைவதற்காகவே கைத்தொழிற் கல்வி வேண்டும்; இதுவே என் கனவு."

1863 ஆம் வருஷம் வர்ஜீனியா என்ற மாகாணத்தில் நீக்ரோ விவகாரங்களைச் சரிப்படுத்தும் உத்தியோகஸ்தராக அவர் அமர்ந்தார். அவர் தலைநகரம் ஹாம்ப்டன் என்பது. உண்மையான கல்விபற்றித்தாம் கொண்டிருந்த கருத்துக்களை இரண்டு வருஷகாலம் அம் மாகாணத்தில் அனுஷ்டித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. உழைப்பின் மூலம் கல்வி என்ற திட்டத்தில் யார்க்கும் ஆர்வமில்லை.

'அதை இங்கு நடத்தினர்கள், அங்கு நடத்தினர்கள், எங்கும் லாபம் இல்லை' என்று பலர் சொன்னர்கள்.

"வாஸ்தவம். பணத்தைப் பார்த்தால் லாப மில்லை. ஆனல், நல்லொழுக்கம் என்ற அளவில் ஏராளமான லாபம், உத்தம மனிதரையும் பெண்டிரையும் இக் கல்வி உண்டாக்கும்" என்றே அவர் பதில் சொன்னர்.

1868 இல் அவர் ஆரம்பித்த ஹாம்ப்டன் விவசாயப் பாடசாலை, இரண்டு வருஷத்தில் தனி அங்கீகாரம் பெற்ற

சிறந்த கலாசாலையாயிற்று. செய்து கற்றல் என்ற கல்வி முறையே அக் கலாசாலையின் திட்டம். 25 வருஷகாலம் ஆர்ம்ஸ்ட்ராங் அதன் தலைமையாசிரியராயிருந்து உழைப்பின் மூலம் கல்வி என்ற தம் கருத்தை அனுஷ்டித்தும் பிரசித்தம் செய்தும் வந்தார். அவர் ஆரம்பித்த இந்த இயக்கம் அமெரிக்காவிலுள்ள எல்லாக் கல்வி ஸ்தாபனங்களின் போக்கையும் முறையையும் ஓரளவுக்கு மாற்றிற்று.

ஆர்ம்ஸ்ட்ராங் பல வருஷகாலம் (1870-92) பேசியும் எழுதியும் வந்த கருத்துக்கள் சில இதன் பின்னே தொகுக்கப் பெற்றுள்ளன. உடலின் பயிற்சி என்று அவர் சொல்வதைத் தான், ஆதாரக் கல்வி முறையில் நாம் உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் ஒருமித்த வளர்ச்சி என்று குறிப்பிடுகிறோம். அவருடைய கருத்துக்களின் சாரம் பின்வருவன ஆகும்:

மூளைக்குப் பயிற்சி தருவதைவிட, கர்மேந்திரியமான கை, ஞானேந்திரியமான கண் முதலியவற்றுக்குப் பயிற்சி தருவது முக்கியம். உழைப்பின் மூலமே திறமை வளரும். உழைப்பே நல்லொழுக்கமும் மனிதப் பண்பும் தரும். செயல் திறமையே கல்விக்கு அடையாளம். சிறுவரும் சிறுமியரும் சேர்ந்து பயில்வதுதான் பிற்கால நல்வாழ்வுக்கு வழி. தன் முயற்சி, கட்டுப்பாடு, தியாகம் என்ற குணங்கள் கல்வியால் வரவேண்டும். தெய்வ பக்தி அவசியம்.

உடல், உள்ளம், உயிர் மூன்று தலைப்புக்களின் கீழ் அவருடைய கருத்துக்கள் இங்கு தரப்பெற்றுள்ளன. இவற்றின்பின், அவர் எழுதிய ஓர் அறிக்கையின் சுருக்கமும், அவர் எழுதிய மரண சாசனக் குறிப்பு ஒன்றும் சேர்க்கப் பெற்றுள்ளன. இக்குறிப்பைப் படிக்கும்போது, ஆசிரியருடைய அருங் குணங்களை எண்ணி யாரும் மனம் உருகாமல் இருக்க முடியாது. மனிதன் என்ற முறையில் அவருடைய

எளிமையும் தியாக உணர்ச்சியும் கடவுள் உணர்ச்சியும் நம் கண்முன் வந்து நிற்கின்றன.

இப்புத்தகம் சிறிதாயிருந்தாலும், காந்திய ஆதாரக் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் எல்லோரும் அவசியம் படித்துச் சிந்திக்க வேண்டிய அரிய நூலாகும்.

திருச்சிற்றம்பலம்
7-11-1949

மு. அருணாசலம்

# வாழ்க்கைக்கான கல்வி

## 1. உறுப்புக்களின் பயிற்சி

நம் கைகள் தொழில் செய்து பழகுவது என்ற பழக்கத்தை நம் நாகரிகத்தில் அடியோடு விட்டுவிட்டோம். ஆயினும், அரசாங்கப் பாடசாலைகளில் இந்தத் தொழிற் பயிற்சி மெல்லத் தலைகாட்டி வருகிறது ; இதற்கு எதிர்ப்பு இருப்பது உண்மை ; எனினும் இது நாளடைவில் பரவுவது நிச்சயம்.

இந் நாட்டு மக்கள், தங்கள் கலாசாலைகளில் பிள்ளைகள் கிரேக்க மொழி முதலியன பயில்வதற்காக வேண்டி, கிரேக்க பாடம் போதிக்கும் ஆசிரிய பதவிகளை ஏற்படுத்தி, அதற்குப் பணம் செலவு செய்வது அவசியமென்று கருதுகிறார்கள். ஆனால், தொழில் செய்வதால் வருகிற தொழில் ஞானமும், தொழில் செய்யும் பழக்கமும் தன்னம்பிக்கையும் புகட்டுவதற்கு வேண்டிய ஆசிரியர்களை வைத்து, அவர்களுக்குத் தக்க வசதியளித்துப் பாடசாலை நடத்துவது அவசியமென்று மக்கள் உணரவில்லை.

தொழில் மூலம் கல்வி பயிற்றுவது என்ற முறையால் விளையும் பெரும் பயன், குணச் சிறப்பு அல்லது நடைத் திட்பம் என்று கூறலாம். ஆதலால், இக் கல்வி முறையானது, உண்மையாகப் பார்த்தால் தனக்காகும் செலவைப் போல் எத்தனையோ மடங்கு பெறுமானமுடையது. இதற்குப் பிடிக்கும் செலவு சொற்பமன்று ; ஆனால் இச்செலவால் மிக்க லாபமுண்டு.

பிற கல்வி முறைகள் அனைத்துக்கும் ஆகும் செலவை விட, கைத்தொழிற் பயிற்சியாகிய கல்விக்கு அதிகம்

செலவு பிடிக்கிறது என்று தோற்றலாம்; ஆனால், ஒழுக்கம் என்ற நோக்குடன் பார்த்தால், இக்கல்வி முறையால் விளையும் பலன் இச் செலவுக்கு நிச்சயம் ஈடு செய்கிறது.

உழைப்பே ஒரு சிறந்த அறச் சக்தி என்பது என்னுடைய உறுதியான கருத்து; என் அனுபவம் இக் கருத்தைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

கோபுரத்துக்கு அஸ்திவாரம் எப்படியோ அப்படித்தான், எல்லா மனிதர்களிடத்திலும் குணத் திட்பத்துக்குச் சுறுசுறுப்பான பழக்கங்கள்; கல்வியானது, அறிவின் விளக்கத்தையும் மனத்தின் பக்குவத்தையும் மட்டும் பொறுத்து ஏற்படுவதன்று. பெரும்பான்மையும் சுறுசுறுப்பாக உழைக்கும் பழக்கத்திலிருந்து பிறப்பதே கல்வியாகும். கோபுரம் முழுமையும் ஊடுருவிக் கம்பீரத்தோடு பொலியச் செய்யவல்ல தெய்வ ஒளியொன்று கோபுரத்தின் சிகரத்தில் பிரகாசிக்க வேண்டும்; ஆனால், இதற்கு அடிப்படையாக, கிரமமான தினசரி உழைப்பு இருந்தால்தான் சாசுவதமான பொலிவுடைய எந்தக் கட்டிடமும் நிலைக்க முடியுமென்பதை நாம் மறக்கவியலாது. பொதுவாக, உழைப்பும் சீலமும் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பனவேயன்றித் தனியே நிற்பனவல்ல.

ஆப்பிரிக்காவில் புதிதாகக் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்கள் நன்னெறியில் வாழ்க்கை நடத்தவேண்டுமானால், அவர்களுக்குக் கைத்தொழிற் கல்வி தரவேண்டுமென்றும், இந்தியாவில் புதிதாய்க் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்கள் பட்டினி கிடக்காமல் போதிய உணவு பெற்று வாழ்க்கை நடத்த வேண்டுமானால், அவர்களுக்கும் கைத்தொழிற் கல்வி தரவேண்டுமென்றும், 1888ஆம் வருஷம் லண்டன் நகரில் நடந்த பாதிரிமார் மகாநாட்டில் பேசினார்கள்.

கிறித்தவ வாழ்க்கை வாழ்வதென்றால், ஒருவன் தன் கையை நம்பியே வாழ வேண்டியவன். வயிறு பட்டினி

கிடந்து காயும்போது, நேர்மையான வாழ்க்கை நடத்துவது அருமை. ஆதலால், தனக்கு வேண்டியதை எவன் தானே தேடிக்கொள்ள வல்லவனுயிருக்கிருனே அவனே கிறித்தவ வாழ்வு வாழக் கூடியவன்.

வாழ்க்கையிலிருந்து உடலுழைப்பு என்ற அம்சத்தைக் குறைத்துவிட்டால், சில மாதங்களில் வாழ்க்கையே சின்னபின்னமாகியிருக்கக் காண்பீர்கள். இதயத்தில் நிலவ வேண்டிய தெய்வ அருளுக்கு அடுத்தபடியாக,நாகரிகத்தை வளர்க்கும் சக்திகளில் சிறந்தது சீலமே ; சீலத்தை வளர்க்கும் சக்திகளில் சிறந்தது, உடலுழைப்பொன்றுதான்.

கல்விச் சாலைகளில், உடலுழைப்புக்குச் செலவிடும் நேரமானது வழக்கமாய்க் கல்விக்காகும் நேரத்தில் கால் பங்கேயிருக்கும் ; ஆனுல் இதன் பயனுய்க் கல்வியில் ஏற்பட வேண்டிய முன்னேற்றம் அற்பமே குறைந்திருக்கும் ; குறையவில்லை என்றே சொல்லலாம். உண்மையில், உடலின் வலிமையாலும், அருமையாய்க் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கல்வி பயிலாமல் வீண்போக்கலாகாது என்ற ஆர்வத்தாலும், கல்விப் பயிற்சியின் வேகம் அதிகமாகிறது. இது காரணமாக, உடலுழைப்பில்லாது கல்வி பயிலும் போது பாட வகைகள் எவ்வளவு விரிந்து கிடக்குமோ அவ்வளவு விரிந்து போவதில்லை ; ஆனுல் இந்த முறையால் விளையும் மிகச் சிறந்த பலன் என்னவென்ருல், குணத்திட்பம் பிறந்து வலிவடைய இது உதவுகிறது என்பதுதான்.

* * * *

உடலை வருத்தி உழைப்பது, மூளையைச் செலுத்தி வேலை செய்வது என்ற இரண்டையும் இணைத்துக் கல்வி பயிற்றும் திட்டத்துக்கு, யேற்போக்காகவே பல ஆட்சேபங்கள் தோன்றக்கூடும். இத்திட்டத்தின்படி, பாட முறை எளிதாக நடைபெற இயல்வதில்லை. காரியமும் அது காரணமாய் விளையும் பிரதிகாரியமும் நிகழ்கின்றன ; சோர்வும் எழுச்சியும் பிறக்கின்றன ; ஆனுல், மக்கட்

பண்பின் ஆழத்தில் அடக்கமாயிருக்கும் சக்திகள் இங்கு முன்போல் உறங்கிக் கிடப்பதில்லை; இவை விழிப்படைந்து செம்மையில்லாதவற்றையெல்லாம் செம்மைப் படுத்துகின்றன ; பாடசாலையே எதிர்கால வேலைக்கான பயிற்சிக்கூடமாகிறது. இதிலிருந்து வெளிப்பட்டு வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள், வெறும் பண்டிதர்களாயில்லாமல், கிரமமான ஆடவரும் பெண்டிருமாகவே பிரவேசிக்கிறார்கள்.

உடலுழைப்பு எல்லோருக்கும் கட்டாயமாயிருக்க வேண்டும். உழைக்காதிருக்கிற சீமான்களின் சமூகம் உழைப்பின் மூலம் கல்வி பயிற்றும் பாடசாலைகளின் கேட்டுக்கு வித்தென்று கருதவேண்டும்.

கைத்தொழில் நிலையங்கள் ஒழுங்கான முறையில் அமைக்கப்பெற்று, பயிலும் மாணவர்கள் தங்கள் உணவுக்கும் உடைக்கும் ஆகும் செலவைத் தங்கள் உழைப்பின் மூலம் ஈடுசெய்யத் தக்கபடியிருத்தல் வேண்டும். ஒழுங்கு முறையும் கட்டுப்பாடும் மிக்க உயர்ந்த தரத்தனவாயிருத்தல் வேண்டும் ; தகுதியற்றவர்கள் அனைவரையும் கவனமாய்ப் பார்த்து நீக்கிவிடவேண்டும் ; ஆனால், எவ்விதமான சரீரதண்டனையோ, இழிவு தரும் பிற தண்டனையோ அளித்தலாகாது. நடுநிலைமை குன்றாது மிக்க உறுதியோடு நிர்வாகம் நடைபெறுதல் வேண்டும். கல்வி போதனையில் காட்டும் திறமை மிகவும் உயர்ந்த தரத்ததாயிருத்தல் வேண்டும். மக்களிடையில் எந்தச் சக்திகளேனும் நல்ல பயன் விளைக்கும் என்றால், மேற்கூறிய நான்கும்—அதாவது கிரமமான கைத்தொழில் அமைப்பு, உயர்ந்த தரத்ததான ஒழுங்கு முறை, உறுதியான நிர்வாகம், திறமை மிகுந்த கல்வி போதனை என்ற நான்கும்—சேர்ந்து சிறந்த பலன் விளையச் செய்யவல்லன. இன்றுள்ள வீண் ஆரவாரமும் ஆபத்தும் விளைவிக்கிற கிளர்ச்சிக்காரர்களுக்குப் பதிலாக, இவற்றால், திறமையும் ஆள்வினையும் மிகுந்த உபாத்தியாயர்கள் உதிப்பார்கள் ; அறிவிற் சிறந்த தலைவர்கள் உதிப்

பார்கள் ; மக்களிடை அமைதி நிலவச் செய்யவல்ல சாந்த சொரூபர்கள் உதிப்பார்கள்.

கறுப்பினமக்கள், இக வாழ்வில் தங்களுக்குரிய விமோசனத்தைக் கொஞ்ச காலத்துக்கு மண்ணிலிருந்து தான் தேடிக்கொள்ளவேண்டும். இன்று வேண்டியவர்கள் பாவலரும் நாவலரும் அல்லர் ; தொழில் திறமை வாய்ந்த உழவரும் வினைஞருமேயாவர்.

உபாத்தியாயர் வாழ்க்கையிலுள்ள கட்டுப்பாடு எவ்வளவு கண்டிப்பானதோ அவ்வளவு கண்டிப்பானது, உழவர் வாழ்க்கையிலுள்ள கட்டுப்பாடும். சபையில் வாதம் செய்வதில் வல்லவனுயிருப்பவன், வெளிவேலையில் சோம்பல் நிறைந்தவனுயும் எல்லோருக்கும் பிற்பட்டவனுயும் இருத்தல் கூடும் ; கணித சாஸ்திரத்தில் மந்தமாயிருப்பவன் தொழிலாளர் படையின் முன்னணியில் இருத்தலுங் கூடும். சாதாரணப் பாடசாலைகளில், ஒருவன் திறமையை, படிப்பு என்ற அளவுகோலால் ஒருதலைப் பட்சமாகவே மதிப்பிடுகிருர்கள் ; இதற்கு எதிர்த்தட்டாக மற்றொரு பட்சம் இருப்பதையும் நாம் இவ்விதம் காண முடிகிறது. எனவே, நம்மிடையில் திறமை அல்லது தகுதியை வகுப்பில் ஒப்புவிக்கும் பாடத்தினுல் கணிப்பதுபோலவே,வயலில் செய்யும் வேலையினுலும் கணிக்கிருேம். தொழிலுக்கு வந்தனை செய்கிருேம் ; தாங்களே உழைத்துத் தங்கள் செலவுக்கு ஈடுசெய்து கொள்பவர்களுக்கு நியாயமான பெருமையுணர்ச்சி ஏற்படுகிறது.

நீக்ரோ மக்களினத்தின் ஆக்கமும் கேடும், அம்மக்கள் முழுச் சக்தியோடு உழவுத் தொழிலிலும் பிற கைத்தொழிலிலும் ஈடுபடுகிருர்களா, அல்லது ஈடுபடாமல் இவற்றை ஒதுக்குகிருர்களா என்பதைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய தலைவர்களிடம் உடலுழைப்பே மேலானது என்ற உணர்ச்சி பொங்கவேண்டும் ; இக வாழ்வில் வெற்றி

தரும் வழி துறைகளை இவர்கள் நன்ருய் அறிந்திருக்க வேண்டும்.

அமெரிக்கத் தெற்கு மாகாணங்களில் இன்றுள்ள நிலைமையில், ஆசிரியத் தொழிலும் உழவுத் தொழிலும் ஒன்றை யொன்று தழுவி நிற்கின்றன. தான் உழவனு யிருந்து கொண்டே உபாத்திமைத் தொழிலையும் செய்து வருபவன்தான் இக்காலத்துக்குத் தக்க தொண்டனுவான். இவனொருவனே மக்களுக்கு வருஷமுழுமையும் கல்வி போதிக்க வல்லவனுயிருப்பான்.

அமெரிக்க மாகாணம் ஒவ்வொன்றிலும், நீக்ரோ மக்கள் வந்து பயிலும்படியாக விவசாயக் கலாசாலையும் சோதனைச் சாலையும் ஏற்படுத்த வேண்டும்; அவர்களுடைய தேவை என்னவென்று கவனித்து, அவர்களிடையுள்ள முக்கியமான குடியானவர்களுடன் நேர்முகமான தொடர்பும் இருக்கும்படி அக்கல்விச் சாலையை அமைக்கவேண்டும். ஆயிரக் கணக்கான மக்கள், செயல் முறையில் செய்து பழகவும் அறியவும் வேண்டிய அனேக விஷயங்களை அறியவேயில்லை; அக்கல்விச்சாலை இவற்றையெல்லாம் அவர்களுக்குத் துண்டுப் பிரசுரம் அறிக்கை முதலியன மூலமாக எடுத்துச்சொல்லி, புதிது புதிதாக ஊக்கமளிக்க வேண்டும். தென்னுட்டைக் கல்வி முறையில் கை தூக்கி விடுவதற்காக விரிவான எந்தத் திட்டம் போட்டாலும், அதில் இவ் வேலைகளுக்கு இடங்கொடா விட்டால் பயன் இராது.

எந்தக் கல்விச் சாலையில் உடலுழைப்பு என்ற முறையை நடத்த முற்பட்டாலும், அங்கு அறிவியல் ரீதியாகவும் கிரியாம்சையிலும் கல்விக்கு என்ன தேவையோ அதற்கிசைந்தபடிதான் அம்முறையை நடத்த வேண்டுமென்று நாம் கருதுகிருேம். முதலாவதாக, இந்த உடலுழைப்பு என்னவாயிருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இதுபற்றி இரண்டு கருத்துக்கள் வழங்குகின்றன.

பயிலும் பிள்ளைகள் தங்கள் செலவுக்குத் தேவையான வருவாய் தேடிக்கொள்ள வழி காட்டுவதே உடலுழைப் பின் முழு நோக்கமாகும்; விரிவான அமைப்புடன் லாபகரமாக நடத்தப் பெறும் ஒரு விவசாயப் பண்ணையில், அதிகமான மாணவர்கள் பயிர்த்தொழிலின் மூலம் தங்கள் வாழ்க்கை நடத்துவது சாத்தியமாயிருக்க வேண்டும்; அப்படியே, மக்களனைவரும் பொதுவாக உபயோகிக்கக் கூடிய சாமானியத் துணிமணிகளை உற்பத்தி செய்கிற பெரிய தொழிற் சாலைகளில், அதிகமான மாணவர்கள் கைவினைத் தொழில்கள் செய்து தங்கள் வாழ்க்கையை நடத்துவது சாத்தியமாயிருக்க வேண்டும்; இவ்விரு வகை யிலும், குறித்த கைத்தொழிலானது மாணவர் தங்கள் செலவைத் தாங்களே வகிக்கும்படி செய்ய வல்லதாயிருப் பதுதான் பிரதானம், மற்றப்படி அது கல்வி தரும் கைத் தொழிலாயிருப்பது பிரதானமன்று என்பதே முதன்மை யான கொள்கை. இதுவே மேற்சொன்ன இரண்டில், முதற்கருத்து.

இரண்டாவது கருத்து என்னவென்றால், உடலுழைப் பின் பிரதான நோக்கம் இரு துறைகளிலும் கல்விப் பயிற்சி யளிப்பதாயிருக்க வேண்டும் என்பதாகும். அதாவது, மாணவன் குறித்த ஒரு வேலை செய்யும்போது, அவ்வேலை சம்பந்தப்பட்ட தொழில் முறைகளில் உடலுழைப்பின் பயனைய் அவனுக்குப் பூரணமான தேர்ச்சி கைவர வேண் டும்; இதனோடுகூட, அறிவியல் ரீதியாகவும் செயல் முறை யிலும், விவசாயத்தில் அவன் முதல்தரத் திறமை பெற்றவ னாகவும், செய்யும் பிற தொழில்களில் நிபுணனாகவும் ஆதல் வேண்டும்.

இவ்விரு கருத்துக்களில், முதல் கருத்து விரும்பத்தக்க தென்று சில சமயம் தோன்றலாம். ஆனால், இரண்டாவது கருத்து இன்றியமையாதது. பள்ளிக்கூடங்களுக்குத் தனிப் பட்டோர் உதவி செய்வதன் நோக்கம், பத்துப்பேரோ

இருபது பேரோ அல்லது ஐம்பது பேரோ வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருள் தேடுவதற்கு உதவி செய்வது அன்று; தேசத்திலுள்ள தொழில் வசதிகளை யெல்லாம் வளர்த்துப் பெருக்கும் பொருட்டு நூற்றுக் கணக்கான மக்களுக்கு அறிவியல் ரீதியாகவும் செயல் முறையிலும் பூர்த்தியான கல்வி அளிப்பதே அதன் நோக்கமாகும். நிரந்தரமாய் வெற்றிகரமாக நடைபெற வேண்டிய பாடசாலைகள் யாவும் இதை அடிப்படையாய்க் கொண்டே நடைபெற வேண்டும். ஆனால், தாராளமாக விதை விதைக்காமல் எந்த அறுவடையும் செய்ய வியலாது; அதுபோல, இப்படிப்பட்ட கல்வி முறைக்குத் தொடக்கத்தில் செலவு அதிகம் பிடிக்குமென்பது வெளிப்படை. தங்கள் செலவைத் தாங்களே சரிக்கட்டி நடத்திக் கொள்ளும் கல்வி ஸ்தாபனங்கள் சிறந்தவைகளே; எனினும், எந்தக் கல்வி ஸ்தாபனங்கள் மிகவும் சிக்கனமாகவும் லாபகரமாகவும் நிர்வகிக்கப் பெற்று வந்து, கேவலம் பொருள் உற்பத்தியைத் தங்கள் முதல் நோக்கமாய்க் கொள்ளாமல் கல்விப் பயிற்சியைத் தங்கள் முதல் நோக்கமாய்க் கொண்டிருக்கின்றனவோ, அந்தக் கல்வி ஸ்தாபனங்களே முடிவில் மேலான நன்மையைத் தருவதுடன், தேசிய வாழ்வையே மேம்படவும் செய்ய வல்லவை.

ஒரு கைத்தொழில் முறையானது செம்மையாக நிர்வகிக்கப்பெறுமானால், அந்த முறையில் தாங்களாக விரும்பியோ, அல்லது அவசியத்தை முன்னிட்டோ வந்து வேலை செய்பவர்களிடத்தில் நன்மை விளைவிக்கும் ஆற்றலை மிகுதியாகப் பெறுகிறது; இவ்வாற்றல் எவ்வளவு என்று இப்போது அளவிட்டுச் சொல்ல முடியாது. இவ்விதம் நன்மை விளையும் என்ற நம்பிக்கை, நம் சொந்த அனுபவம் காரணமாக, வர வர அதிகமாகிறது; இந்த அனுபவமே, கல்வி சம்பந்தமான ஒரு கொள்கையை எடுத்துரைக்கும் போது, அதற்கு அடிப்படையாயிருக்கிறது. கைத்தொழி

னல் விளையும் பொருள் மதிப்பை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், நமக்குக் கிடைத்துள்ள எல்லாச் சக்திகளிலும் மிகவும் வலிமை வாய்ந்த ஆன்ம சக்தி அதுவே என்பது புலப்படும்; நாம் கல்வி கற்பிக்க வேண்டியிருக்கிற வெள்ளையினத்தார், நீக்ரோக்கள் என்ற இரண்டு இனத்தாருடைய நாகரிகத்தையும் மேம்படுத்துவதற்கான பாதையும் அதுவே என்று நாம் கருதவேண்டி யிருக்கிறது. நல்லொழுக்கமும் குணத்திட்பமும் தோற்றுவிப்பதில் கைத்தொழிலானது அதிகமான சக்திவாய்ந்தது என்பதை நாம் தயங்காமல் சொல்ல முடியும்; நாம் மேற்கொண்டிருக்கிற கல்வித் துறையில், கடவுளருளால், நமக்குப் பெருந் துணையாயுள்ள இந்தச் சக்தியை ஒருநாளும் கைவிட முடியாது.

உடலுழைப்பை நம் கல்விக்கு அடிப்படைத் திட்டமாக நாம் ஆக்கியபோதும், உடலுழைப்பு வேண்டுமென்பதற்காகவே அப்படிச் செய்தோம்; செய்தபோது, தனி மனிதனிடத்திலும் மக்கள் இனத்திலும் ஒருமிக்க வளர்ச்சியை உண்டுபண்ணும் ஆற்றலுடையது என்பதை மனமார நாம் அறிந்திருந்தோம்; இதன்பொருட்டு, வெறும் மூளைப்பயிற்சியில் தேவையான அளவைக் குறைத்துக் கொள்ளவும் நாம் தயாராயிருந்தோம். பதினறு வருஷ அனுபவம் இந்தக் கருத்தை மேலும் வலியுறுத்துவதோடு, முடிவாகப் பார்க்கும்போது தொழிற் பயிற்சிதான் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது என்பதையும் நிரூபித்திருக்கிறது.

வாராந்த வேலை நாள் வரும்போது, படிப்பில் தடை உண்டாகிறது. ஆனல், அதுவே புத்தியை எழுப்பிவிடுகிறது. வாஸ்தவமான வளர்ச்சியானது, உழைப்பில்லாமல் வருவது குறைவு, உழைப்பு இருந்து வருவது அதிகம்.

வருஷந்தோறும் நாங்கள் மிக்க கவனத்தோடு பார்த்து வருகிற மற்றொரு சிறந்த பலன் என்னவென்றல், உழைக்க வேண்டும் என்ற எண்ணமும் பழக்கமும் தருகிற அறவொழுக்கத் தூண்டுதலும், குணச் சிறப்புத் துலக்கம்

பெறுவதில் காணப்படும் ஆர்வமும், புத்திக்குத் தருகிற வேகமும் உறுதியும் ஆகும்.

மனவுறுதி, தைரியம், பொறுமை, நம்பிக்கை ஆகிய இந்தப் பண்புகள், கஷ்டமான நிலைமையில் நடைபெறுகிற எங்கள் இராப் பள்ளிக்கூடங்களில் ஓங்கி வளர்கின்றன; உண்மையான வாழ்க்கையின் அம்சங்களோடு தொடர்பிருந்தால்தான் இந்தப் பண்புகள் தனிச் சிறப்படையும், நிலைக்கும் என்று அனுபவத்தில் அறிந்திருக்கிறோம்.

ஒரு பிள்ளையோ பெண்ணோ, தொழில்வினைஞராக ஆகவேண்டுமென்று நினைக்காத போதிலுங்கூட, சாமானியமாய்க் கருவிகளை உபயோகித்திருப்பது மிகவும் நன்மை தரும்; உதாரணமாக, பள்ளிக்கூடப் பெஞ்சிப்பலகை உடைந்துபோனால் அதைச் செப்பனிடுவது, கரும் பலகையோ அலமாரியோ செய்வது முதலிய வேலைகளை இங்குக் குறிப்பிடலாம், ஆனால், கிரமமான தொழில்வினைப் பயிற்சி பெறுகிற பையனும், முழுப்பயிற்சி பெறுமல் கொஞ்சம் பயிற்சி பெறுகிற பையனுங்கூட, பாடசாலையில் சிறந்த பலனைப் பெறுகிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். பாடசாலையின் எலும்பும் நரம்பும் அதை யொட்டிய பாடசாலையிலிருந்து உண்டாகின்றன; இராப் பள்ளிக்கூடங்களில் இரண்டு வருஷம் படித்த பிறகு, பகல் நேர வகுப்பில் படித்து வாரத்தில் இரண்டு நாள் உழைப்பதனுலேயே இவை உண்டாகின்றன.

அப்படியானல், வெறுந் தொழிற் பயிற்சியைவிட, தொழிலாளியாகவே இருந்து அப்பியாசம் செய்து பயில்வது எந்த விதத்தில் அதிகம் மேம்பட்டது? முதலாவதாக, இந்த அப்பியாசம், வாஸ்தவமான வேலை; இது வாழ்க்கைக்கு வலிமையும் பயனும் தருகிறது. செய்யும் வேலையில் பிறக்கும் ஆர்வம், கவனம், திருத்தம், கடைபோகச் செய்தல் ஆகிய நற்பழக்கங்கள் வாஸ்தவ வேலை என்ற அப்பியாசத்தால் விளைகின்றன. வேலையில் நோக்கம் பொறுப்பு என்ற

தன்மைகள், வியாபார ரீதியான யோசனைகள், இது சம்பந்தமான அளவைகள் ஆகியவை தருகிற வலிமையும் இந்த மேம்பாட்டுக்குக் காரணமாகும்.

நாம் கைத்தொழில் செய்வதால் பண லாபம் வருவது தற்செயலான பலன்; இது அவசியமாய் வேண்டும் என்பதில்லை. ஆனால், செய்ய உபயோகித்த மூலப்பொருளின் மதிப்பையும் பிள்ளை செய்த உழைப்பின் மதிப்பையும் அடைவது அவசியமாகும். எனினும், ஒரு ரூபா சம்பாதிப்பது, ஒரு ரூபா செலவழிப்பதைவிட மேல். அப்படியே, மனிதப் பண்பு உண்டாக்குவதே முதல் வேலை, பணம் சம்பாதிப்பது இரண்டாவது வேலைதான். ஆனால், பணம் சம்பாதிப்பதிலும்கூட, அதனால் வரும் திறமையும் பயிற்சியும் மக்களுக்கு நன்மை தரக்கூடும்.

உற்பத்தியைப் பெரிதாய்க் கருதுவதுபோல், அதில் கல்வி போதனையையும் பெரிதாய்க் கருதவேண்டும். வேலைச்சாலை பையனுக்காக ஏற்பட்டது; பையன் வேலைச்சாலைக்காக ஏற்படவில்லை.

தனக்குத்தானே உதவுதல் என்ற கருத்து, பொருள் உற்பத்தி செய்கிற தொழில் நிலையங்களில்தான் நிறைவேறக்கூடும். எதற்கு என்ன மதிப்புத் தர வேண்டுமோ அதைக் கிரமமாய்த் தருவதால், உழைப்பானது கல்விக்கும், மற்றெல்லாப் பெருஞ் சிறப்புக்கும், வெற்றிக்கும், வீரத்துக்கும், குணச்சிறப்புக்கும் செலுத்த வல்ல ஒரு வழியாகவும் ஏணியாகவும் அமைகிறது.

## 2. மனத்தின் பயிற்சி

மனத்துக்குப் பயிற்சி தருவதன் நோக்கம், கட்டுப்பாடு பெறுவதும் ஆற்றல் பெறுவதுமாகும்; இவை, மாணவன் அடையும் அறிவினால் வருபவையல்ல; பயிற்சி முறையாலும் பயிற்சியின் போக்கு அல்லது தத்துவத்தாலும் வருபவை.

வகுப்பறையில் புகட்டும் கல்வியின் நோக்கம் யாதாகு மென்பது எனக்கு மேலும் மேலும் தெளிவாகிக் கொண் டிருக்கிறது : சமமாகவும் நேர்மையாகவும் சிந்தனை செய்யும் ஆற்றலை வளர்ப்பதே கல்வியின் நோக்கம். இவ்விதம் சிந்தனை செய்யும் ஆற்றல், நல்ல பயிற்சியின் மூலந்தான் வரும். அப்பயிற்சி, தன்முயற்சியால் வருவதாயின், இவ் வாற்றல் விளைவது எளிது ; மக்கள் சாதித்த அருஞ் செயல் கள் அனைத்துக்கும், தன்முயற்சியே அடிப்படை.

பாடசாலைகள் மூளையை மட்டும் வளர்ப்பதற்காக ஏற்பட்டவையல்ல ; பூரண மனிதனை ஆக்கவே அவை ஏற்பட்டவை. எனவே, ஆசிரியர்கள், வெறும் பாடம் போதிக்கும் உபாத்தியாயர்களாக இருத்தல் போதாது ; உத்தமப் பிரஜைகளாகவும் இருக்கவேண்டும்.

கல்வி போதனையில், ஆசிரியரின் பெருந்தகுதியே பிரதானமானது. உபகரணங்களைப் பற்றிய கூச்சல் இப் போது எங்கும் பெருகிவிட்டது ; ஆனால், படிப்பில் உப கரணங்களுக்கு முதலிடம் இல்லை.

உள்ளம் வேகமாய் அபிவிருத்தியடைவது போல, அவ்வளவு வேகத்தில் குணச் சிறப்பு அபிவிருத்தி யடைவ தில்லை. பள்ளிக்கூடவேலை, நேர்முகமாக உள்ளத்தைப் பாதிக்கிறது ; மறைமுகமாகத்தான் நல்லொழுக்கத்தைப் பாதிக்கிறது. மாணவனுடைய நல்லொழுக்கம் வளர்ந்தது என்றால், அது முறையான பாடப்பயிற்சியினால் அல்ல ; ஆசிரியரின் குண விசேஷத்தாலும் அவருடைய பழக்கத் தாலுமே யாகும்.

மனிதனிடம் அமைந்துள்ள எல்லாப் பண்புகளுக்கும் கல்வி அல்லது விளக்கம் தருக என்பதே நம் கருத்து. மாணவன் எந்த வாழ்க்கை வாழப் போகிறான் என்று தெரிகிறதோ அவ்வித வாழ்க்கைக்குரிய தகுதியை அவ னுக்குத் தரவேண்டும்.

பாடசாலையில் கற்பிக்கும் எழுத்துப் படிப்பு, திட்டமாக அவனுக்கு மனிதத்தன்மையை உண்டாக்குவதில்லை. செயல் முறையில் தன்னடக்கம் என்பது பாடம் படிப்பதால் வந்துவிடுவதில்லை.

அறிவு பெறுவதற்குப் புத்தகங்கள் அவசியம்தான். ஆனால், ஞானம் பெறுவதற்கும் மனிதசக்தி பெறுவதற்கும் அவை அவசியம் அல்ல.

பெருந்திரளாயுள்ள கூட்டத்தில் மெல்ல வேலை செய்யும் சிறு சக்தி போன்றது கல்வி. பொதுவாக எங்கும் வியாபித்து எதையும் இயக்கி வருகிற அதன் சக்தியை ஆரம்பத்தில் பல வருஷ காலம் உணரமுடியாது.

வெறும் புத்தக அறிவினால் அதிகப் பலன் விளைய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்; அன்றியும், ஒரே தலைமுறையில் அதிகம் நிறைவேற வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், உண்மையான முன்னேற்றமாகட்டும், எல்லோரும் அதாவது தனிமனிதர் மாத்திரமல்லாமல் மக்கள் இனங்கள் எல்லாம் சமம் என்பதாகட்டும், சரித்திர முழுமையிலும் பார்த்தால், மிகவும் மெதுவாகத்தான் கைகூடும். மிக நீண்ட காலம் என்ற அளவுகோலை வைத்துத்தான் இதை அளக்கவேண்டும்.

நெடுங்காலமாக நான் அறிவே ஆற்றலாகாது என்று சொல்லி வருகிறேன். நன்றாய் ஜீரணமாகாத அறிவினால் சில சமயம் வெறும் இறுமாப்பு என்ற கேடுதான் விளைகிறது.

நீக்ரோவுக்கு அறிவு சுலபத்தில் வருகிறது. அதை உபயோகிப்பதுதான் அவனுக்குச் சுலபத்தில் வருவதில்லை. மற்றெல்லோரையும் போலவே அவனுக்கும், அறிவு சுலபமாய் வந்தாலும், ஞானம் அப்படிப் பிறப்பதில்லை.

பண்டை இலக்கியங்களையேனும் பிரகிருதி சாஸ்திரங்களையேனும் பயில்வது அவசியமென்று கல்வித் திட்டங்கள் வற்புறுத்துகின்றன. இது சரியல்ல. கற்கிற பொருளின்

உயிர்நாடி எது, அதன் தத்துவம் யாது என்று நுணுகி ஆராய்வதில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்றே நான் கருதுகிறேன். முக்கியமான அறிவு என்பது புத்தகத்திலிருந்து பெறமுடியாதது. கூர்மையான உணர்வினால் அது வருவது. அறிவுடையவர்கள் காட்டும் வழியில் சிரத்தையும் உறுதியும் பூண்டு ஆராய்ந்து சிந்திப்பதால் அவ்வறிவை நாம் பெறுகிறோம்.

பலவீனமான மக்களினங்களின் கல்வியில் காணும் குறையாவது, அளவுக்கு மிஞ்சிய படிப்பும் தனித்த வாழ்க்கைப் பயிற்சிக் குறைவும் ஆகும். கல்வி போதனைக்கு எல்லை எது என்று வரையறை செய்வது கஷ்டம். ஆனால், இக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே பரோபகாரமாய்க் கல்வி போதிப்பவர்கள் இந்த எல்லையை அடியோடு புறக்கணித்துவிடுகிறார்கள். இதனால் வேலை வீண்போவதோடு, ஏமாற்றமும் ஏற்படுகிறது. சாதாரணப் பையனுக்கு, குறைந்த அறிவு கேடானது என்று சொல்வது போலவே, அளவுக்குமிஞ்சிய போதனையும் கேடானதாகும்.

நம் நாட்டிலுள்ள வெள்ளை மக்கள் அல்லாத மற்றவர்களுக்கு, வழக்கமாயுள்ள பல்வேறு பாடங்கள் எல்லாவற்றையும் போதிப்பதைவிட அதிகமான பயிற்சி அளிக்க வேண்டும்; இரு பாலாருக்கும் அந்தப் போதனை வேண்டும்; ஜீவனத் தொழில்கள் பலவகைகளையும் போதிக்கவேண்டும்; உள்ளத்தின் உறுதியை வளர்ப்பதோடு நல்லொழுக்கத்தையும் அது தோற்றுவிக்க வேண்டும்; முதல் தரமான தொழில் திறமை வாய்ந்த உழைப்பாளிகளாக மாணவர்களை அக்கல்வி ஆக்குவது போலவே, அவர்களை உத்தம ஆடவராகவும் பெண்டிராகவும் ஆக்கவேண்டும்; இந்த மக்களின் பழஞ்சரித்திரத்தை நாம் எண்ணிப் பார்த்தால், அவர்களுக்கான ஒரு கல்வி ஸ்தாபனத்தில் இத்தனையும் அமைய வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஓர் ஆங்கிலப் பாடத்திட்டம், அதில் வாசித்தல், பேச்சு வன்மையோடு சொற்பொழிவுசெய்தல், பூகோளம், கணிதம், சரித்திரம், அரசியல் சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரங்கள், தாய்மொழி அதன் இலக்கியப் பயிற்சி, நீதி நல்லொழுக்கம் பற்றிய முக்கிய தத்துவங்கள், பொருளாதார சாஸ்திரம்—இவ்வளவும் அடங்கிய பாடத்திட்டமானது, எதிர்காலத்தில் இன்னும் அனேக வருஷங்கள் இங்கு வந்து படிக்கப் போகிற மாணவர்களில் 20 இல் 19 பேருக்குள்ள எல்லாத் திறமைகளையும் பெருக்குவதற்குப் போதுமானது என்று நான் எண்ணுகிறேன். மற்றப்படி யாரேனும் ஒரு பையன், புராதன இலக்கியங்களைப் பயில விசேஷத் திறமை வாய்ந்திருந்து, தான் இலக்கியப் புலவனாக விரும்பினால், அவனுக்கு விசேஷப் பயிற்சியளிப்பதோ அல்லது விசேஷப் பயிற்சிக்கான கலாசாலைக்கு அவனை அனுப்புவதோ நம் கடமையாகும்.

விசேஷ மேதை இருந்து அது விளக்கம் பெறவேண்டுமானால், அதற்கு விசேஷ வசதி வேண்டும். ஆனால் இயற்கையில், விசாலமான சாகுபடி என்பது சமவெளியில்தான் நடைபெறும். மேதைக்கும் இது பொருந்தும். விசேஷ மேதையிருந்தால், அப்பையனுக்கு நடுத்தரமான பையனைப் போன்ற அதிகக் கவனம் தேவையில்லை. கல்வி சம்பந்தமான திட்டங்களுக்கு இடமாய்க் கொள்ள வேண்டுவது, நடுத்தரமான தகுதி பெற்ற பிள்ளைகளைத்தான்.

நீக்ரோப் பிள்ளைகளுக்கு வேண்டிய முக்கியமான பாடம், தர்க்கப் பயிற்சியும், பகுத்தறிவின் ஆட்சிக்கு உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். ஆனால், அவனுக்குப் பாடங்களை வகுக்கும்போது, புதியதை அறிவதில் அவனுக்குள்ள அவாவையும், அற்புதமானவற்றில் அவனுக்குள்ள ஆர்வத்தையும், அவனுடைய மனோதர்மத்தையும் தூண்டிவிட்டு, ஊக்கம் குன்றாமல் அவன் கற்கும்படி பயில்விக்க வேண்டும்.

நாகரிகப்படுத்துவது நம் வேலையாய் இருந்திருக்கிறது. அவ்வேலை முழுவதும் புத்தகப் படிப்பு ஆகாது சாதாரண நடையுடைபாவனை, பழக்க வழக்கங்கள், தொழில் செய்யும் முறை, வாழ்க்கையும் கடமையும் பற்றிய சரியான எண்ணங்கள் ஆகிய இவை வாழ்க்கையில் பொருந்த வேண்டிய முக்கியமான பாடங்கள். பட்டதாரிகள் மற்றப் பிள்ளைகளுக்கு இந்தத் தன்மைகளைப் பின்னால் புகட்ட வேண்டுமென்று எண்ணத்தோடு நாமும் இங்கு அவர்களுக்கு இவற்றைப் புகட்டி வருகிறோம்.

இவர்களுக்கு வியாபார முறைகள் சரிவரத் தெரியாமையினால், பிறர் இவர்களை எளிதில் ஏமாற்றிவிடுகிறார்கள்; வியாபாரத்தில் பொதுவாக இவர்களுக்குக் கவனமும் இல்லை, திறமையும் இல்லை. மாணவன் ஒவ்வொருவனுக்கும் ஒரு விலைப்பட்டியல் தயாரிக்கவும் கடன் பத்திரம் எழுதவும் கிரமமான ரசீது எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். நிலம் விற்பது வாங்குவது ஆகிய விவகாரம் நன்றாய்ப் பழக்கமாயிருக்க வேண்டும்.

17 முதல் 21 வயது வரையுள்ள மாணவர் வந்து படிப்பது சிறப்பென்று கருதுகிறேன். இந்த வயதுதான் அவர்களுடைய எதிர்கால வாழ்வு உருவடையும் காலம். இன்னும் குறைந்த வயதாய் இருந்தால் நம் இஷ்டப்படி எளிதில் வளைக்கலாம் என்பது வாஸ்தவம். ஆனால் இப் பிள்ளைகள் நாம் வளைத்தபடி நிற்பதில்லை. பயிற்சியில் பெரும்பகுதி இவர்களுக்கு ஜீரணமாவதில்லை. மேற்குறித்த வயதில் தான் புத்தியினால் கிரகித்தல், உடம்பில் வலிமை, வாழ்க்கை லக்ஷ்யத்தைத் தேர்வதில் அதிகஅறிவு நிர்ணயம், உறுதி ஆகிய பண்புகள் காணப்படுகின்றன.

மாணவர்களில் சிலர் கஷ்டப்பட்டுத்தான் ஒன்றைக் கிரகிக்கப்பவர்களாயிருக்கிறார்கள். ஆனால், மிக்க திறமையுடைய பண்டிதர்களாக முடியாத இந்தப் பிள்ளைகள் தான் தொழிலில் அதிகமான வெற்றியோடு வேலை

செய்யவல்ல பயனுள்ள ஆசிரியர்களாய் உருவாக இட மிருக்கிறது.

ஒரு நோக்கம் வைத்து அதற்கென்று வேலை செய் வதைப் போல லாபகரமானது வேறென்றில்லை. எண் ணங்கள் துப்பாக்கிக் குண்டுகளைப் போன்றவை : மக்கள் இருக்க வேண்டிய இடமாகிய முன்னேற்றத்தின் முகப் பில் இவை இருக்கின்றன.

## 3. ஒழுக்கப் பயிற்சி

**எ**ல்லாக் கல்வியின் நோக்கமும், வளர்ச்சி தருவது ; பொறுப்புணர்ச்சிதான் வளர்ச்சி தருவதற்குச் சிறந்த சக்தி.

மனிதத் தன்மையில் சிறந்த பண்பைத் தோற்று விப்பது, வாழ்க்கையில் வரும் போராட்டம். இளைஞர் அனேகர் செல்வ வசதி பெற்றிருப்பதனால் கல்விக்காக அவர்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. இதுவே அவர் களுக்கு ஒரு குறைவாயிருக்கும்.

மக்கள் சில சமயம் முழந்தாளிட்டுப் பணிவது அவசியமாகிறது. தோல்வியிலும் துன்பத்திலுமே நாம் அதிகமாய்க் கற்றுக் கொள்ளுகிறோம்.

மக்களிடம் நம்பிக்கை வைப்பதனால்தான் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறார்கள். வாழ்வின் நீதிகளை அவர்கள் வாழ்வில் கற்கிறார்களே ஒழிய, வாழ்க்கைக் குப் புறம்பே கற்பதில்லை.

வாழ்க்கை என்பது ஏணி போன்றது. மனிதன் இருக்குமிடத்தே அவ்வேணியின் கீழ்ப்படியைக் கொண்டு வந்து நிறுத்துவதுதான் சிறந்த வேலை. அவன் தன் சொந்த முயற்சியினால் உச்சிப்படிக்கு ஏறமுடியும்.

உயிர் வாழ்வதிலுள்ள அற்புதம் என்னவென்றால் 'செய்யமுடியாது' என்பதைச் செய்வதே. ஓய்வில்லாத

உழைப்பு என்பது பலவீனம். ஓய்வும் உழைப்பும் கலந்த அல்லது நிதானமான முயற்சிதான் நமக்கு வேண்டுவது. முன்னால் போகும் ரயில் என்ஜினைப் பின்னாலும் போகச் செய்யலாம். ஆனால், நினைத்த மாத்திரத்தில் பழக்க வழக்கங்களை இப்படிச் செய்ய முடியாது. அதற்கு அவகாசம் வேண்டும். மெல்ல இப்படிச் செய்யமுடியும்.

வலிமை யற்றவர்களுக்குச் சௌகரியமான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்துத் தொடர்ச்சியாக அவர்களைச் சோதனைக்கு உட்படுத்துவதுமூலம் அவர்களுக்கு வலிமையை உண்டாக்கலாம். பரஸ்பர சம்பந்தம் பற்றி அவர்களுக்குள்ள தாழ்ந்த எண்ணங்களைப் பயிற்சியின் மூலம் உயர்ந்த எண்ணங்களாக்கலாம். ஆனால், இதற்குப் பயிற்சியானது கருத்தளவிலல்ல, செயலளவில் வேண்டும்.

ஆண்மை என்பது, அதற்கு இடம் கொடுத்தால்தான் விளக்கம் பெறும். சாமானியப் பள்ளிக்கூடத்தில் பிரஜா தத்துவம் என்பது நம்மிடையே சிறந்த அபிவிருத்தியைத் தரவல்ல சக்தி. நம்பிக்கைதான் ஆண்மையை வெளிப்படுத்தவல்லது. தினசரி வாழ்வில் வாழும் முறையையும் கடமைகளையும் மாணவர்களுக்குப் போதிக்கும் திறமையைச் சாதாரணப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு வருவிக்க வேண்டும், அவர்கள் இப்படிப் போதிக்கவும் வேண்டும் என்பது முக்கியம். அளவில்லாத பொறுமையும் விடா முயற்சியும் இருக்குமானால், சிறந்த சுகாதார வாழ்வுக்கான ஆரோக்கியமான கருத்துக்களைப் பொதுவாய்ப் பரப்ப முடியும்.

நல்லொழுக்கத்தை அமைப்பதே நம் நோக்கம். இதற்கும் நீதி போதனைக்கும் சம்பந்தமில்லை. பாடசாலையைத் தனியான சிறு உலகமாக அமைத்துக்கொண்டால், நல்லொழுக்கத்தை வளர்க்க முடியும். வயலிலோ வேலைச் சாலையிலோ நாள் முழுதும் மெய்வருந்திச் செய்கிற உழைப்

போடு சமூக வாழ்வில் பிறக்கும் இன்பங்களேயும் கலந்து, பாடசாலேயில் பெறும் மார்க்கினுல் வெற்றி வராது நடத்தையினுல்தான் வரும் என்ற நிலேயை உண்டாக்க வேண்டும். பாடசாலே வாழ்க்கை என்பது உண்மையான உலக வாழ்க்கையாகவே இருக்கவேண்டும்.

குணச்சிறப்பையும் நல்லொழுக்கத்தையும் கருதி நாம் வேலே நடத்தும்போது, பிள்ளேகள் இவ்வளவுதான் இருக்கலாம், இதற்கு மேல் போவது அதிகம் என்ற வரையறையும் உண்டு.

குணச்சிறப்பு அமைவதற்கு, ஆரோக்கியமான நல்ல புத்தகப் படிப்பு ஒரு சிறந்த வழிதான்.

விவகாரத்துக்கான கல்வி என்பது, நேர்மைக்கு வழி காட்டும் ; சிக்கனமான வாழ்வு தந்து வெற்றியளிக்கும்.

காலக்கிரமத்தில்,தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மாணவன் ஒரு வருஷ காலமோ அல்லது அதிகமோ உடல் வருந்தி உழைக்க வேண்டும் என்ற நியதி பொதுவான கல்வித் திட்டத்தில் ஏற்படவேண்டும்.

சமூகவியல் என்ற சாஸ்திரம் இன்று செயல் முறைக்கான சாஸ்திர பாடங்களில் சிறந்தது. அதுவே மற்றெல்லாவற்றையும் நடத்திச் செல்வது. சமூகவியலே நன்ருய்க் கற்றுத் தடுமாற்றமில்லாமல் புத்தியோடு அதை வாழ்க்கையில் கடைப்பிடித்தால், இறைவன் ஆட்சி இந் நிலவுலகில் வருவது நிச்சயம். மதப் பிரசாரத்துக்கான மிஷன் என்பது, நன்னடத்தை அமையச் செய்வதில், நீக்ரோ முதலான எந்த இன இளேஞனுயிருந்த போதிலும், அவன் உள்ளத்தில் வழிகாட்டி உதவவல்ல சிறந்த சக்தியாயிருக்கவேண்டுமென்றே நான் நினேக்கிறேன்.

தென் பகுதியில் படித்துத் தேறிய பட்டதாரியானவன் மக்களுக்கென்றே வாழ்பவனுகவும் மக்களேவிட மேம்பட்டவனுகவும் இருக்கவேண்டும். அவர்களுக்காகத்

தன் ஆயுள் முழுதும் அவன் சேவை செய்வதற்கு இது மிகவும் அவசியம்.

மத மாறுதல் என்பது என்ன? முன்னிலும் சிறந்த வாழ்வுக்குத் தொடக்கம். பழத்தில் விதை எப்படியோ அப்படியே நன்னடத்தையில் மத மாற்றம். இறைவனுடைய சேவையை விரும்பித் தேர்ந்து கொள்வது முதல் படி. இதற்கு முடிவு, பூர்த்தியான முழுக் கிறித்தவ வாழ்க்கை. முதல் படியில் அடி எடுத்து வைப்பது ஒரு கண நேரத்தில் செய்த தீர்மானமாகலாம். ஆனால், இந்த முடிவை அடைய ஆயுள் முழுமையும் போராடவேண்டியிருக்கும். இவ்விதம் பார்த்தால், விதை விதைப்பது பெரிய காரியமல்ல, வளர்ந்து வரும் பயிரை அறிவோடும் விழிப்போடும் காத்து வருவதே பெரிய காரியம் என்பது விளங்கும். உலகெங்கும் அனேக மக்கள் கிறித்தவத் தத்துவங்களை எளிதாக ஒப்புக்கொள்வதைக் காண்கிறோம். ஆனால் கிறித்தவ தருமங்களை அவர்கள் கடைப்பிடிப்பதே இல்லை. மனிதன் சக்தியில் பல பிரிவிலும் பயிற்சியளிப்பதுதான் அவனைச் சீர்திருத்த வல்லது என்பதை உணர்ந்து மனிதனைப் பூர்ண மனிதனுக்கும் பயிற்சி முறைகள் ஏற்படுகிறவரையில் இந்த நிலை இருக்கத்தான் செய்யும்.

நாகரிகத்துக்கு அளவை என்பது குடும்பம். ஆகவே, ஆடவருக்கும் பெண்டிருக்கும் கல்வி யளிப்பதில் தூய்மையான குடும்ப வாழ்வுக்கு வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்துவதே முதல் வேலை. இருபாலாருக்கும் ஒன்றாய்க் கல்வி கற்பிப்பது மிகவும் அவசியமானது. சமூகத்தில் பெண்களின் நிலையே நாகரிகத்துக்கு உண்மையான உரைகல் என்றால், இளம் பிள்ளைகளுக்கு மாத்திரம் தனியாகக் கல்வி கற்பித்தால், உண்மையான சமூக மேம்பாட்டுக்கு நாம் எப்படி உழைத்வர்களாவோம்? எந்த விதத்திலும் இருபாலர்ருக்கும் நாம் தருகிற சந்தர்ப்பங்கள் சமமாகவே இருக்கவேண்டும்.

இருபாலாரும் கலந்து வாழட்டும். மனித இயல்பு நியாயமான வழியில் அமைதி பெறட்டும். எப்படி மக்கள் பிற்காலத்தில் வாழவேண்டியிருக்குமோ அப்படியே அவர்கள் வாழ வசதியளித்து வாழ்க்கைக்கு அவர்களைத் தகுதியாக்கவேண்டும். இவற்ருல் அவர்களிடை முன்னிலும் சிறந்த ஒழுக்கம் அமையும்.

யுத்தம் விளைவித்த கேட்டால் நம் நாட்டில் வெள்ளை கறுப்பு என்ற இரண்டின மக்களும் சேர்ந்தே கல்வி பயில வழியில்லாமற் போய்விட்டது. ஆகவே, தென்பகுதி நாடுகள் செய்யத்தக்க சிறந்த வேலையாவது, இவ்விரண்டினத்தாருக்கும் கல்விக்கு ஏற்பாடு செய்வது. நம் நாட்டு நிர்மாணச் சட்டங்கள்,பெருந்தீயின் குறுக்கே போட்டுள்ள மரப் பாலம்போல் இருக்கின்றன. கிறித்தவக் கல்வியால் மக்களை மேம்படுத்துவதென்பது, ஏசுநாதர் வருகைக்காகச் சாலை அமைப்பது போன்றதுதான்.

செல்வத்தின் பெருக்கமோ சக்தியின் பெருக்கமோ உண்மையான முன்னேற்றமாகாது. ஞானம், தன்னடக்கம், லக்ஷ்ய நோக்கங்கள், கிறித்தவத் தத்துவங்கள் ஆகிய இவைகளே முன்னேற்றமாகும். இது ஒன்றே உண்மையான நிர்மாணம். ஹாம்ப்டன் கல்வி ஸ்தாபனம் இந்த வேலைக்கென்றே ஏற்பட்டது.

கல்வியானது வாழ்க்கையின் விரிவு அனைத்தையும் தழுவ வேண்டும். நல்ல பழக்கங்கள், உத்தம லக்ஷ்யங்கள் அமைவதை நோக்கமாய்க் கொள்ளவேண்டும். தினசரி வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் கவனிக்கவேண்டும். உணவு விஷயத்தில் சத்துள்ள பொருள்கள், நல்ல சமையல், நேரந்தவருமை ஆகியவற்றை வலியுறுத்த வேண்டும். வழக்கங்களைப் பொறுத்த வரையில் தகுதியான உடை, உடற்பயிற்சி, உடல் சுத்தம், சுற்றுப்புறத் துப்புரவு, காற்றோட்டம் உழைப்பு, சிக்கனம் என்பவற்றை வலியுறுத்த வேண்டும். எல்லா விஷயங்களிலும் அறிவோடு

கூடிய அப்பியாசத்தையும் தன்னடக்கத்தையும் வற்புறுத்த வேண்டும். இத்தகைய கல்வியே நமக்கு அவசியமானது.

இரண்டு கருத்துக்கள் நம் முன் உள்ளன. ஒன்று புத்திக்குப் பயிற்சி யளித்தல்; புத்தியில் அதிகமான அறிவைச் சேமித்து வைத்தல், நாகரிகத்தில் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குதல். மற்றது இன்னும் கஷ்டமானது; கல்வி என்பதற்கு என்ன விரிவான பொருள் உண்டோ அவ்வளவும் அமையும்படிச் செய்ய முயல்வது. இவ்விரண்டில் முந்தியது விரிவானது; ஆனல் எளியது. பிந்தியதோ, மிகவும் கஷ்டமான வேலே. மனிதனைப் பாதிக்கக்கூடிய எல்லா விதமான சக்திகளையும் அவனுக்கு முன்னேற்றம் தரக்கூடிய நிதானமான அளவில் அவனைச் சூழ இருத்துவது எளிதான காரியமல்ல. எவ்வளவு சிறந்த உபகரணமாயினும் அதன் உபயோகம் அளவுபட்டதுதான். உயர்ந்த லக்ஷ்யத்துக்கு அது பூரணமாய் ஒத்து வராவிட்டால், அது பயனற்றுப் போகிறது. ஊசி, துடைப்பம், நீர்த்தொட்டி, உளி, குறடு, கலப்பை ஆகிய கருவிகள் மனிதனுடைய கல்வியில் பூகோள உருண்டை, கரும்பலகை, பாடப் புத்தகம் ஆகியவற்ருேடு கூடவே உதவிக்கு வருகின்றன.

தினம் 24 மணி நேரத்துக்கும் திட்டமிடவல்ல ஒரு கல்வி முறையே சாமானிய நீக்ரோப் பிள்ளைக்கு இன்று தேவை இந்தத் திட்டம் இருந்தால்தான் அவன் மனத்திலுள்ள பழைய நினைப்பையும் முறையையும் பிடித்துத் தள்ளிவிட்டுப் புதியவற்றைக் கொண்டுவந்து புகுத்துவது வது சாத்தியம். உத்தமமான பழக்கங்கள் ஏற்படுவது நம் வேலைக்கே அடிப்படையாகும். வடபகுதிப் பாடசாலையில் இவை இருக்கின்றன என்று நாம் கொள்ளலாம். ஆனல். தென்பகுதியில், இவை நாம் அடையவேண்டிய நோக்கங்களில் ஓர் அம்சம். எளிதாக இவற்றை அடைய முடியும். நீக்ரோப் படைவீரனைப்போல நீக்ரோ மாண

வனையும் அறிவோடு நடத்தி வந்தால், திருத்தமான துப்புரவும் சிறந்த நடத்தையும் உடையவனாக எளிதில் மாற்றிவிடலாம்.

நாம் செய்யும் எல்லா வேலையிலும் இதயப் பண்பு என்பதே மிகவும் முக்கியமான வேலை. கிறித்தவ சித்தாந்தத்தின் உயிர்த் தத்துவங்களைப் போதிப்பது மிகவும் அவசியமான வேலை. இக வாழ்வினும் மேலான வாழ்வு பெறவேண்டும் என்ற உண்மையான ஊக்கத்தை எழுப்பி விட முயலவேண்டும். இந்த ஊக்கத்தால் இளம் பிள்ளைகள் சிறந்த ஊழியர்களாக வளர்ந்து, தாங்கள் அதில் பற்றுதலும் ஆதரவும் பெறுவதோடு, தங்கள் இனத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும்.

நம் பிள்ளைகளில் சிலர் நல்லெண்ணமுடைய நேர்மையான மாணவர்கள். ஆனால் இவர்கள், நல்ல நடத்தை இருந்தால் திறமைக் குறைவாயிருக்கிறார்கள். அல்லது சிறுபிள்ளைத்தனமும் முரட்டு சுபாவமும் தாழ்ந்த குணமும் உடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களே நமக்குக் கவலை தருகிறார்கள். பிற் சொன்ன தன்மை உடையவர்களில் ஒருவன் ஆர்வம் நிறைந்திருக்கலாம்; அவனிடம் ஆற்றல் இருக்கும்; இது நன்மைக்கும் பயன்படும், தீமைக்கும் பயன்படும்; இதில் அபாயம் எது என்றால், அவன் சுபாவத்திலுள்ள தீமையானது அவனைச் சூழ்ந்துள்ள மற்ற இளம் பிள்ளைகளுக்கு எளிதில் படிந்து விடும். முடிவாய்ப் பார்க்கும்போது அவன் வலிமை வாய்ந்த மேன்மையான மனிதனாக வளர்ந்திருப்பான். ஆனால் அதற்கிடையே, பெருந்தீமை விளைந்திருக்கும். பாடசாலையின் பொதுவான நல்ல தன்மை குறைந்து, அவனிடம் கற்ற தீமை அனேகரிடத்தில் போக்க முடியாமலே நிலைத்து விடும்.

நீக்ரோக்களைப் பற்றிய முக்கிய பிரசினை, குறித்த ஒன்றில் விசேஷத் திறமை அல்லது வெற்றி பெறுவது

என்பதல்ல ; படிப்பு வருவது மாத்திரம் அவர்கள் பிரசினை யல்ல ; எல்லாத் துறைகளிலும் வெற்றி பெறுவது எப்படி என்பதே அவர்கள் பிரசினை. நல்லொழுக்கம், தன்னடக்கம், உழைப்பு, சமூகத்தை ஒன்று திரட்டி அமைக்கும் சக்தி, நல்லதெது அருவருப்பானதெது என்ற வரையறை விதிக்கும் சக்தி, நல்லொழுக்கத்தையே ஆதரிக்கவல்ல பொது மக்கள் மனப்பான்மையை உருவாக்கும் சக்தி, வாழ்க்கையில் வரும் தொடர்புகளில் பகுத்தறிவோடு வேலை செய்யும் சக்தி—ஆகிய இவைகளே அவர்களுடைய பிரசினையாகும்.

கட்டுப்பாட்டின் முடிவான நோக்கமாவது, மாணவனிடம் சரியான இயக்க சக்தியை உண்டுபண்ணுவதும், நல்ல பழக்கங்களை உண்டுபண்ணுவதும், தன்னுடைய உணர்வின் உதவியால் தன்னைத் தானே பயிற்றிக் கொள்ளும்படி செய்வதுமாகும்; எனினும், நாம் கற்பிக்கிற பிள்ளைகள் குயவன் கை மண்போல் நினைத்த உரு எடுக்க வல்லவர்களாயிருப்பதால், தன்னைப் பயிற்றிக் கொள்வதோடு பிறர் புத்தியையும் ஒழுக்கத்தையும் பயிற்றுவது அவசியமாகிறது. இதற்கு ஒவ்வொரு பிள்ளையின் நடத்தை அல்லது தன்மையையும் ஆராயவேண்டும். புத்திமதி, அனுதாபம், இவற்றினும் மேலாக, எதிலும் தலையிடாமை என்பனவும் வேண்டும்.

ராணுவக் கசரத்து என்பது நல்ல உதவிசெய்திருக்கிறது ; சாமானிய நற்குணங்கள் சிலவற்றை இது பழக்கமாகவே ஆக்கிவிடுகிறது ; அன்றியும், முக்கியமாக மாணவர்கள் நடத்தும் ராணுவ விசாரணையின் மூலமாக, சிறந்த தன்னடக்கப் பயிற்சியளித்து, நீக்ரோக்களிடம் மிகவும் குறைவாய்க் காணப்பட்ட அன்பு நிறைந்த ஒத்துழைப்பு என்ற பண்பை வளர்க்க உதவுகிறது. வெளிப்படையாக, தினசரிக் கடமைகள் செய்வதில் ஏற்படுகிற மந்தத்தைப் போக்கி, அது ஒரு புதிய பிரகாசத்தையும் அளிக்கிறது. இப் பிரகாசத்தை ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும்

காணலாம். ராணுவப்பயிற்சியில் ஏற்படும் வழிநடைக் கீதமும் உடையின் பளபளப்பும், தச்சன் பட்டறையிலும் வண்ணுன் துறையிலும் வேலே செய்து வந்த அயர்வை ஓரளவு போக்கி உற்சாகம் தர உதவுகின்றன. உற்சாக முள்ள மனம் பாதி வெற்றி என்பது பழமொழி.

புதிதாய்ச் சுதந்திரம் பெற்ற இந்த மக்களுக்குச் சங்கீதம் ஒன்றுதான் பழமையை எடுத்துக் காட்டுகிற சாதனம். இதுவே எதிர்காலத்தில் அவர்கள் மனத்தில் ஆர்வத்தை நிரப்பி வழிகாட்டவல்ல சக்தி. இதை அனேகர் உணரவில்லே.

சுதந்திரம் பெற்றவனுக்குப் பொருள் கிடைத்தால் நல்லதுதான். அவனிடம் உயர்ந்த ஒழுக்கம் இல்லே என்ற குறை உண்டு. இந்த ஒழுக்கம் பிறப்பதற்கான நிலேமை யைத் தந்து அவனே முன்னிலும் சிறந்த பிரஜையாக ஆக்குவது பொருட்செல்வமே.

எந்த நிலேமையையும் நன்ருய்ப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நம்பிக்கை இழந்தவர்கள் வலிவும் துணிவும் இழந்து பின்னடைகிருர்கள். ஆனல், நம்பிக்கை நிறைந் துள்ள ஆடவரும் பெண்டிரும் முன்னணிக்கு வருகிருர்கள். வெறும் நம்பிக்கை முட்டாள் தனமானது. ஆனல் புனித மான விவேகம்தான் வெற்றி பெறுகிற சக்தி. கடவுளுக்கும் மனிதனுக்கும் சேவை செய்வதென்ருல் அதில் எத்தனேயோ விவரங்கள் அடங்கியுள்ளன. அதற்கு அமைப்பு வேண் டும். அமைப்புக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். நாவடக்கம் வேண்டும். சில சமயம் நாவடக்கம் மிகவும் கஷ்டமாகவும் இருக்கும். வம்பளப்பை நிறுத்த வேண்டும். சாத்தா னுடைய வேலேகளில் மிகவும் கேடானது வம்பளப்புத் தான். இறைவனுடைய தொண்டர் படையிலும், பூசலும் படாடோபமும் தோல்விக்குத்தான் இடம் தரும். சேர்ந்து உழைப்பதே மிகவும் முக்கியமானது.

# முதல் வருஷ அறிக்கை (1870)

அமெரிக்க நாட்டின் தென்பகுதி மாகாணங்களில் வாழும் ஏழை மக்களுக்கு ஏற்ற கல்வி எப்படி இருக்க வேண்டுமென்பது கேள்வி. முயற்சியும் பணமும் சிக்கனமாகச் செலவிட்டு சிறந்த பயன் அடைவது நம் நோக்கம்.

விடுதலை பெற்ற நீக்ரோ மக்களுடைய தன்மை யாது, அவர்களுடைய தேவை என்ன, இவற்றை ஒட்டிய கல்வித் திட்டம் எப்படி இருக்கவேண்டும் ?

அடிமை நீக்ரோவிடமிருந்த குணக் கேடுகளைப் போக்கி அவனிடம் நல்லொழுக்கத்தையும் அறிவுத் திறமையையும் புதிதாய் ஆக்கவல்ல ஒரு கல்வியே வேண்டுவது. ஊதாரித்தனம், ஒழுக்கம் கௌரவம் பற்றிய தாழ்ந்த எண்ணங்கள், செயலில் இயக்கும் சக்திக் குறைவு, நிதானக் குறைவு, முன்யோசனையின்மை ஆகியவை அவர்களுடைய குணக்கேடுகள். இத்தனைக் கேடுகள் உடைய அடிமையாயிருந்த நீக்ரோவானவன் இப்போது சர்வஜன சுதந்திரத்தால் விளையும் போட்டியில் ஈடுபட நேருகிறது. அரசியல் அதிகாரம் அவனுக்கும் இருப்பதால் அதற்கு அவன் இரையாகிறான்.

அவனிடமுள்ள தற்பெருமையே அவனைக் கெடுக்கிறது. பிறரிடம் அவன் கருவியாவதைத் தடுக்க வெறும் ஏட்டுப் படிப்பு போதாது. கல்வி கற்ற மனிதனுக்கு, வாழ்க்கையனுபவத்தைவிட புத்தி வேகமாய் வளர்ந்திருப்பதால், தன்னைப்பற்றிய பெருமித எண்ணம் அவனுக்குண்டு. ஆனால், நீக்ரோவானவன், செயல் செய்வதைவிடப் பகட்டாகத் தோற்றவேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஆகவே, அவனுடைய அறியாமையைவிட, குணக்கேடுகள் அவனுக்கும் உலகத்துக்கும் அதிகத் தீங்கு தருபவை. எனினும், கீழ்ப்படிதலும் அபிவிருத்தியில் ஆர்வமும் விடாமுயற்சியும் அவனுக்கு இருப்பதால், நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது.

ஹாம்ப்டன் என்ற இடத்தில் இவர்களுக்கு எத்தகைய கல்வி வேண்டுமென்பது பற்றி, உத்தமமான பண்பாடு வாய்ந்த ஆசிரியர்களை வைத்துச் சோதனை செய்து பார்க்கிறோம். இச்சோதனையில் சிறந்த இளைஞர்களையே எடுத்துக் கொள்ளுகிறோம். ஏழைமை காரணமாக உடல் உழைப்பு அவசியமாயிருக்கிறது. இக்கல்வியில் மூன்று அம்சங்கள். ஒன்று உழைப்பு, இரண்டு ஒழுக்கமும் அறிவு வளர்ச்சியும், மூன்று கட்டுப்பாடு அல்லது நிர்வாகம்.

முதலாவது: உடல் உழைப்பையும் மூளை உழைப்பையும் ஒன்று சேர்ப்பதற்கு அனேக ஆட்சேபங்கள் வருகின்றன. பூசல்கள், திகைப்பு, கல்வி முன்னேற்றத்துக்கு மேற்போக்கான தடை, மேற்கொள்ளும் தொழிலில் லாபக் குறைவு முதலியன ஏற்படுவது வாஸ்தவம். "உங்கள் பிள்ளைகள் பாடங்களெல்லாவற்றையும் படிக்க அவகாசம் கிடைக்கிறதா?" என்று கேட்கலாம். நாம் நேரத்தைப் பொதுவாகப் பயன்படுத்தும் முறையைக் கொண்டு பார்த்தால், இதற்கு அவகாசம் இல்லை என்று சொல்லலாம். ஆனால், படிப்பிலுள்ள கட்டாயத்தால், எங்கள் பிள்ளைகள் கிடைத்த நேரத்தை நன்றாய்ப் பயன்படுத்துகிறார்கள். படிப்பில் அதிகமான சக்தியையும் அதிகமான வேகத்தையும் அவர்கள் காட்டுவதால், உழைப்பில் செலவிட்ட நேரத்தையும் ஈடுசெய்துவிடுகிறார்கள். அன்றியும், உழைப்பினால் உண்டான உடல் வலிமையால், இன்னும் அதிகமான மூளை உழைப்புக்கு வேண்டிய வலிமையும் அவர்கள் தாராளமாய்ப் பெறுகிறார்கள். பண்புகளுக்குக் கட்டாயமான விளக்கம் தருகிற இந்த முறையைப்போல் நன்மையானது வேறொன்றில்லை. வயலில் செய்கிற கடின உழைப்பின் பிறகு ஒருவன் இந்தக் கல்வி முறையால் அதிகப் பிரகாச மடைந்து முன்னிலும் நன்றாகப் பாடம் கற்கிறான்.

பெண்கள் பகுதியில், குறித்த ஒரு குழுவினர், குறித்த கால அளவு, குறிப்பிட்ட ஒரு வீட்டுவேலையைச் செய்கிறார்கள். வயல் வேலையிலும் எல்லாப் பையன்களையும் தினமும் ஒன்றாய்ச் சேர்த்துச் சில மணி நேரம் உழைக்கும்படி செய்வதை இப்போது விட்டுவிட்டோம். அவர்களை ஐந்து குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழு ஒவ்வொரு நாள் வேலை செய்வதென்றும் எல்லா குழுக்களும் சனிக்கிழமையில் சேர்ந்து வேலை செய்வதென்றும் திட்டமிட்டிருக்கிறோம். எல்லா வேலைக்கும், மணிக்கு 4 சதம் முதல் 10 சதம் வரை மணிக்கணக்கிட்டுக் கூலி கொடுக்கிறோம். இத்திட்டத்தில் தொழில்கள் மிகவும் விருத்தியடைகின்றன. பெண்களை நல்ல ஆடை செய்யச் செய்து அதைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது மூலமாக, பெண்கள் உழைப்பையும் லாபமாக ஆக்கிவிட்டோம். ஆடவரும் பெண்டிரும் உற்சாகமாய்த் தங்களுக்கிட்ட வேலையைச் செய்கிறார்கள்.

இரண்டு வருஷ அனுபவத்தில் உடல் உழைப்புத் திட்டம் திருப்தி யளித்திருக்கிறது. கல்வியில் பூரணமான முன்னேற்ற மேற்பட்டிருக்கிறது. வேறெந்தப் பாடசாலையிலும் இவ்வளவு ஏற்படாது. ஒழுக்கத்தில் திடமும் உறுதியும், தன்னல மறுப்புணர்ச்சியும், கிடைத்த சந்தர்ப்பங்களின் பயனை உணரும் தன்மையும் ஏற்பட்டிருக்கின்றன. இவை வேறு நிலைமைகளில் ஏற்பட இடமில்லை. அளவில்லாமல் பிள்ளைகளை உழைப்பில் ஈடுபடுத்துவதானால், இப்பாடசாலையில் பலதொழில்களும் இருக்க வேண்டும். புதியவை பழக்கமாக ஆக, மற்றும் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். உழைப்பும் ஆஜரும் இதனால் பெருகும். முடிவில் கலைத்திறன் பொருந்துகிற முயற்சியும் விளையும்.

இங்கு நம் நோக்கங்கள் இரண்டு : ஒன்று, புத்திக் கூர்மைக்குப் பயிற்சியளித்தல். இரண்டு, பூரண மனிதத் தன்மை விளக்கம் பெறச் செய்தல்.

இப்பாடமுறை சுலபமாக இயங்குவது அல்ல. செயலும் அதன் பயனும் ஊக்கமும் சோர்வும் மாறி மாறி வருகின்றன. ஆனால் மனிதத் தன்மையின் சிறந்த சக்திகள் உறக்கத்திலிருந்து விழித்துக்கொள்கின்றன. கோணலையும் முரட்டுத்தனத்தையும் நிமிர்த்து இவை செம்மையாக்குகின்றன. எதிர்கால வாழ்வுக்குப் பாடசாலை பயிற்சிக் கூடமாகிறது. உலகத்தில் பண்டிதர்களை அனுப்புவதற்குப் பதிலாகச் சிறந்த ஆடவரையும் பெண்டிரையும் அனுப்புகிறது.

இனி இரண்டாவது அம்சம். உள்ளத்தின் பயிற்சியின் நோக்கமாவது ஒரு கட்டுப்பாடும் சக்தியும் வருவித்தல். இவை பாடத்தால் வருவன அல்ல. பாட முறையினாலும் அது பற்றிய மனப்பான்மையினாலும் வருவன. புராதன இலக்கியப் பயிற்சியோ பிரகிருதி சாஸ்திரப் பயிற்சியோ பெரிதன்று. பயின்ற பொருளின் ஜீவன் எது என்று கூர்ந்து நோக்குவதே பிரதானம். ஓர் ஆசிரியர் லத்தீன் மொழி கற்பித்தால் உள்ளத்தில் மிக்க கிளர்ச்சி உண்டாகிறது. மற்றொருவரிடம் அதே பாடம் பயிலும்போது சப்பென்று கஷ்டமாயிருக்கிறது. ஆதலால், இந்தப்பாடம் அந்தப்பாடம் என்ற பேச்சில் பயனில்லை. ஆசிரியரின் தகுதியைப் பொறுத்ததே பாடம். மெய்யறிவு புத்தகத்தால் வருவதில்லை ; நல்லாசிரியர் காட்டும் வழியில் கூர்ந்து சிந்திப்பதால்தான் வருகிறது.

புராதன மொழிகளை ஒரு மாணவன் பயில முடியுமென்றால் இருபது மாணவர் தாய் மொழியையும் அதன் இலக்கியத்தையும் நன்றாய்க் கற்றுப் பயனடைய முடியும். எந்தப் புத்தகத்திலுமுள்ள உயர்ந்த கருத்துக்கள் பரந்த உண்மைகள் உண்மையான அறிவு - இவை மற்றொரு மொழியில் நிச்சயமாகப் பெயர்க்க முடியும் என்று எமர்சன் சொல்கிறார். ஆங்கிலம் படித்தவன் மற்றெல்லா

மொழிகளிலும் உள்ள சிறந்த கருத்துக்களைப் பயின்று கொள்ள வசதியுண்டு.

எங்கள் மாணவர்களுடைய மூன்று வருஷப் பயிற்சியில் லத்தீனோ கிரீக்கோ திறமையாகப் பயில அவகாசம் இல்லை. சொற்பப் பயிற்சி அவர்களுக்கு வீண் கர்வம் தருவது தவிர, உண்மையான பயனை விளைவிக்காது.

எங்கள் திட்டத்தின்படி ஆண்களும் பெண்களும் சேர்ந்து பயில்வது நடைமுறையில் உள்ள பழக்கம், பாடசாலையே ஒருசிறு உலகம். அங்குள்ளது மெய்யான வாழ்க்கை. தொடர்புகள் அங்கு பூர்த்தியாக இருக்கின்றன. பலவகைத் தொழில்கள் உள்ளன. இதனால் வாழ்க்கை சிக்கனமாயிருக்கிறது. பெண்களின் தகுதியே நாகரிகத்தின் லட்சணமென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் ஆண்களை மட்டும் தனியே படிப்பித்தால் சமூகம் எவ்வாறு மேம்படும்? சுதந்திரம் பெற்ற பெண் பழைய அடிமை நிலையிலேயே இருக்கிறாள். பெண்மைக்குரிய சிறப்பும் மேம்பாடும் என்னவோ அவை சிறிதும் அவளிடமில்லை. இருவருக்கும் நாம் சமமான சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும். உயர்ந்த ஒழுக்கத்துக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாதபடி இரு பாலாரையும் சேர்த்துப் படிப்பிப்பதே பரஸ்பரம் நன்மை தருவதற்கான வழி.

இனி மூன்றுவது அம்சம், கட்டுப்பாடு மார்க்குப் போடுதல் பரிசு கொடுத்தல் முதலான தூண்டுதல்களை உபயோகிக்கச் சந்தர்ப்பம் இங்கு எழவே இல்லை. அபூர்வமாகச் சிலரை நீக்கிவிட நேர்ந்தது. பொதுவாகக் கட்டுப்பாட்டின் நோக்கம் சரியான வழியில் செலுத்துகிற சக்தியும் நல்ல பழக்கங்களும் மாணவனிடமே பிறக்கும்படி செய்வதாகும்; அவனுடைய இதயத்தைப் பக்குவப்படுத்தி மேலான வாழ்வுக்கு அவனை நடத்திச் செல்வதாகும்.

எங்கள் கலாசாலையின் சரித்திரத்தைப் பார்க்கும்போது மிக்க ஊக்கம் உண்டாகிறது. மூன்று வருஷத்துக்கு முன்

சொற்பப் பணத்தை வைத்து இதை ஆரம்பித்தோம். இப்போது ஏராளமான பணவசதியும் இடவசதியும் கட்டிட வசதியும் ஏற்பட்டுள்ளன. விடுதலைபெற்ற இந்த மக்களுக்குப் புத்தியும் இதயப்பண்பும் வளர்வதற்குச் சிறந்த வசதிகளை அளித்து எதிர்காலத்தில் இந்த நாட்டை இன்னும் மேம்படவும் தூய்மைபெறவும் செய்யவல்ல கூர்ந்த அறிவும் திடசங்கல்பமும் உடைய மக்களாக இவர்களை அனுப்ப முடியுமென்று எதிர்பார்க்கிறோம்.

## சாசனம்

[ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங் தம் மரண சாசனத்துடன் கூடப் பின்வரும் குறிப்பையும் எழுதிவைத்து, தாம் இறந்த பின்தான் இவற்றை எடுத்துப் பார்க்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். இக்குறிப்பு, ஊழியர் அனைவரும் படித்துப் பயனடையத் தக்கது.]

இப்போது எல்லாம் இன்பகரமாயிருக்கிறது; சுற்றத்தார் சூழவிருக்கின்றனர். கவலைக்கு இடமில்லை. யான் பெற்ற இன்பத்துக்காக நன்றி செலுத்த வேண்டும். இந்த நிலையில் கொஞ்சம் முன்னோக்கிப்பார்த்து, ஒருகால் நான் திடீரென்று இறக்க நேர்ந்தால் சொல்ல விரும்புபவற்றை இப்போதே சொல்லிவிடலாம்.

பாடசாலைக் கல்லறையில், மாணவருள் ஒருவனாக, மாணவனைப் புதைக்குமிடத்திலேயே என் உடலை அடக்கம் செய்க.

என் கல்லறையில் ஞாபகச் சின்னமோ ஆடம்பரமோ எதுவும் வேண்டாம். வெறும் நடுகல் ஒன்று போதும். அதில் உரை எதுவும் எழுத வேண்டாம். என் பெயரும் தேதியும் போதும். என் அந்திமக் கிரியைகள் சாமானியப் படைவீரனுக்குச் செய்வது போல இருக்கட்டும்; எளிதாக, பிரசங்கமெதுவும் இல்லாது நடக்கட்டும்.

இந்தப் பாடசாலையின் வேலையைத் தொடர்ந்து நடத்தப் போதிய நண்பர் முன்வருவார்கள் என்று நம்புகிறேன். இதற்கென்று சிலர் தியாகம் செய்தாலன்றி இது நடைபெறாது.

தியாகம் வேண்டாத வேலை எதுவும் கடவுள் திருப்பணியில் பெரிதாவதில்லை. சாதாரணமாய்த் தியாகம் என்று சொல்வதுதான், ஒருவன், தன்னையும் தன் செல்வங்களான நேரம், சக்தி, வசதி ஆகியவற்றையும் சிறந்த முறையில் பயன் படுத்துவதற்கான இன்பமான வழியாகும். இவ்விதத் தியாக மெதுவுமே செய்யாது வாழ்பவன் இரங்கத் தக்கவன். அவனே அஞ்ஞானி; அவன் கடவுளைக் கொஞ்சமும் அறியவில்லை.

பாடசாலையில் பெரிய காரியம், சண்டை போடுவதல்ல; சேர்ந்து உழைப்பதுதான்; ஆத்திரத்தால் வரும் அறிவற்ற சொற்களையோ செயல்களையோ நிறுத்திவைப்பது; தன்னலமில்லாமல் அறிவுடன் எல்லோரிடமும் உள்ள நன்மையில் சிறந்ததை நாடுதல்; நிதான புத்தியில்லாமல் கேடான மனப்போக்குடைய ஊழியர்கள் எவ்வளவு சிறந்த அறிவும் நாகரிகமும் பெற்றிருந்தாலும், அவர்களை விலக்கிவிடுதல். பிறருடன் சுமுகமாய்ப் பழகாத தன்மை, நாஸ்திகத்தினும் கேடானது.

என் வாழ்க்கைச் சரித்திரம் எழுத முயல வேண்டாம். என் அன்பர்கள் என்னைப்பற்றி நல்ல கதை எழுதி முடிக்கலாம். ஆனால் அது முழு உண்மையையும் காட்டாது. ஒரு ஜீவியத்தின் உண்மை இன்னும் அதிக ஆழத்தில் கிடக்கிறது. நம்மை நாமே அறிவதில்லை; கடவுள்தான் அறிவார். அவர் திருவருளில் எனக்கு நம்பிக்கையுண்டு. நம் மதம் எவ்வளவுக்குச் சுருக்கமோ அவ்வளவுக்கு நல்லது. " உனது சிலுவையையே பற்றி நிற்பேன்" என்ற வாசகம் எனக்குப் போதுமானது.

என் பெற்ருேர், ஹாவாயில் இருந்த எங்கள் இல்லம், யுத்த அனுபவம், வில்லியம்ஸ் கல்லூரியில் படித்த நாட்கள், ஹாம்ப்டன் வாழ்க்கை, வேலே, எல்லாவற்றுக்கும் என் நன்றி உரியது. என் வாழ்க்கையில் ஹாம்ப்டன் பல நன்மைகளேத் தந்திருக்கிறது; இதன் மூலமாகவே இந்த நாட்டின் மக்களில் சிறந்தார் பலர் என் நண்பராயும் உதவியாளராயும் ஆகியிருக்கிருர்கள்; இதன் வழியாகவே, போர்மூலம் விடுதலே பெற்றவர்களுக்கு நேர்முகமாய்ச் சிறிது சேவை செய்யும் அரிய சந்தர்ப்பமும் போரில் தோற்றவர்களுக்கு மறைமுகமாய்ச் சேவை செய்யும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தன; அமெரிக்க இந்தியருக்காக உழைக்கக் கிடைத்தது, என் மற்ருெரு பெரிய பாக்கியம்.

எனக்கு வாய்த்த சந்தர்ப்பங்கள் வெகு சிலருக்கே வாய்த்திருக்க முடியும். நாளுக எதையும் என் வாழ்க்கையில் விடவோ தியாகம் செய்யவோ இல்லே; எல்லாவற்றிலும் எனக்கு இறைவன் வழி காட்டியிருக்கிருன்.

உலகத்தில் எல்லாவற்றிலும் மேலானது பிரார்த்தனே. பிரார்த்தனேயே நம்மைக் கடவுளருகே கொண்டு செல்கிறது. நான் செய்த வழிபாடெல்லாம், உறுதியற்றது, நிலேயற்றது, தொடர்பற்றது; எனினும் அதுவே நான் செய்தவற்றுள் உயர்ந்தது. இதுவே எங்கும் பொருந்துகிற உண்மை; அனேத்தையும் தழுவ வல்ல உண்மையில் தானே ஆறுதல் பிறக்க முடியும்?

மறுவுலகத்தைச் சிறிதேனும் பார்க்க வேண்டுமென்ற ஆசை தனக்குண்டு. அது எப்படித் தோற்றும்? பூரண அழகுடையதாயும் பழக்கமானதாயும் இருக்குமென்பதில் சந்தேகமில்லே. சாவைக் கண்டு நாம் அஞ்சலாகாது. மரணம் நம் நண்பன்.

மரணத்தை நினேக்கும்போது எனக்கு வருகிற ஒரே துயரம், என் அன்பு நிறைந்த மனேவியைக் குறித்தும்

குழந்தைகளைக் குறித்தும். ஆயினும், அவர்கள் என் பிரிவைத் தைரியமாய்ப் பொறுப்பார்கள், முடிவில் இன்னும் பலமடைவார்கள். வாழ்வில் அவர்களே எனக்குப் பெரிய ஆறுதல்.

ஹாம்ப்டன் சோர்வடையக் கூடாது. இந்த நாட்டின் கறுப்பினத்தார் சிவப்பினத்தாரின் குழந்தைகளிடமும், கல்வித் துறையிலும் விசுவாசமுடைய நீங்கள் இதைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

என் பழைய படைவீரர்களின் விசுவாசமும் என் மாணவர்களின் அன்பும் எனக்கு உரைக்க முடியாத ஆறுதல்.

ஒருவனுக்குக் கடவுள் அளித்துள்ள ஞான ஒளியைப் பின்பற்றிச் செல்வதே சிறந்தது. முதலில் கடவுளையும் நாட்டையும் நிறுத்துக. தன்னைப் பின்னே வைக்க.

காலைப் பிரார்த்தனைக்கு மணிச் சத்தம் கேட்கிறது.

ஹாம்ப்டன்
1890 வருஷப்பிறப்பின்
முன் தினம்

ஆர்ம்ஸ்ட்ராங்

# ஆதாரக் கல்விக்கு

## உரிய புத்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆதாரக்கல்வி என்றால் என்ன? | 1 | 0 |
| சிறுவர்க்கான பாடல்கள் | 0 | 6 |
| வாழ்க்கைக்கான கல்வி | 0 | 7 |
| கிராம நிர்மாணத் திட்டம் (குமரப்பா) | 0 | 8 |
| நிர்மாணத்திட்டம் (மகாத்மா காந்தி, ராஜேன் பாபு) | 0 | 14 |
| சுயராஜ்ய சாஸ்திரம் (வினோபா பாவே) | 2 | 0 |
| காய்கறித் தோட்டம் | 5 | 0 |
| வாழைத் தோட்டம் | 1 | 12 |
| பழத் தோட்டம் | 10 | 0 |
| முதல் வகுப்பு ஆசிரியர் | 1 | 0 |
| இன்றைய பேச்சு—ஆதாரக்கல்வி (கிருபலானி) | 2 | 0 |
| நமக்கேற்ற உணவு | 0 | 10 |
| ஆதாரத் தொழில் நூற்றல் (வினோபா பாவே) | 1 | 0 |
| அழிவற்ற வாழ்வு (குமரப்பா) | 2 | 8 |
| ஆசிரம வாழ்க்கை (மகாத்மா காந்தி) | 1 | 4 |
| ராட்டை-தத்துவ விளக்கம் ,, | 1 | 4 |
| சர்வோதயம் ,, | 0 | 10 |
| காந்திய நவநீதம் (மஷ்ருவாலா) | 2 | 0 |
| ராட்டைப் புரட்சி | 0 | 6 |
| தக்கிளியால் நூற்பதெப்படி? | 0 | 8 |
| பட்டை போடச் சுலபவழி | 0 | 6 |
| நூற்புக்கலையின் நுணுக்கங்கள் | 1 | 0 |
| கிஸான், பெட்டி, ஈரிழை, ராட்டை | 1 | [illegible] |
| கைராட்டை: அதன் சரித்திரமும் புத்துயிரும் | 1 | 8 |
| மலஜல சுத்தி | 0 | 8 |
| துப்புரவு விஞ்ஞானம் | 0 | 12 |
| சுயம்பூரண கிராமம் | 0 | 6 |